நிகழும் திருவள்ளுவராண்டு ஸ்ரீ துர்முகி வருடம் 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற **வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்டநடவடிக்கைகள் விவரம்**

**<u>பொருள் : 1</u>**

உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவரையறை மேற்கொள்வது தொடர்பான வழிமுறைகள் அட்டவணைகள் மற்றும் உத்தேச கால அட்டவணை (Tentative Schedule) ஆகியவைகளை அனுப்பி வார்டு மறுவரையறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வார்டு மறுவரையறை ஆணைய கடிதம் எண். 3174/17/EG1, நாள். 19.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 23.10.2017ம் தேதிய 23617/16/எம்3, கடிதங்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் வால்பாறை நகராட்சியில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், வார்டில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படையிலும் வார்டு மறுவரையறை பணிகள் முடிக்கப்பட்டு ஒப்புதலுக்காக உத்தேச வரைபடங்கள் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் திருப்பூர் அவர்கள் பரிந்துரையுடன் வார்டு மறுவறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்கள் மூலமாக உறுப்பினர் செயலர் வார்டு மறுவரையறை ஆணையம் சென்னை அவர்கள் அலுவலத்திற்கு அனுப்பப்பட்டது.

அதன் பேரில் பொதுமக்கள் மற்றும் அனைத்து உள்ளூர் கட்சி பிரமுகர்களிடம் இருந்து 12,01.2018க்குள் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று அதன் பேரிலும் மற்றும் அதன் தொடர்ச்சியாக நகராட்சி அலுவலகத்தில் அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும் அதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.02.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதன் பேரில் வார்டு எண்கள் 18,19 மற்றும் 20 ஆகியவைகளின் தொடர்புடைய அனைத்து படிவங்கள் மற்றும் வரைபடங்களில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் செய்யப்பட்ட தற்போதைய திருத்திய இறுதி வார்டு மறுவரையரை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்களுங்களுக்கு ஒப்புதல் வழங்கி வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

வார்டுகள் மறுவரையறை செய்வது தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட திருத்திய இறுதி படிவங்கள், வரைபடங்கள் மற்றும் கருத்துருக்களுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண் : 866 மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**